மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு .—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## (3) அறிவிப்புகள்.

### (அ) மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் 'தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு அடகுக் கடைக்காரரர்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 12/1979)' திருத்தம் ஏதுமின்றி நிறைவேற்றப் பெற்றுள்ளது என்று மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப் பெற்றுள்ளது.

## (1) தகவல் கோரல்—தொடர்ச்சி.

### (ஆ) முதலமைச்சர் தம் வினாக்களுக்குப் பதிலளிப்பது குறித்து.

திரு. அ. ரகுமான்கான் : சார், பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டபோது, முதலமைச்சுரவர்களின் வினாக்களுக்கு பதில் சொல்லுவார்கள் ; இந்த மன்றத்தில் பதில் அளிக்கப்படும் என்று சொன்னீர்கள். ஆனால் இன்றைக்குக் கூட முதலமைச்சர் கேள்வி வரவில்லை. இது இப்படித் தொடர்ந்துகொண்டே போகிறது. இதற்கு இறுதியாக தாங்கள் ஒரு பதிலைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திங்கட்கிழமையிலிருந்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கேள்விகள் இடம் பெறும்.

திரு. மு. கருணாநிதி : திங்கட்கிழமை என்றால் 12-ந் தேதி என்று அறிகிறேன். 12-ந் தேதி வினாப் பட்டியல் எங்களுக்கு வந்திருக்கிறது. அதிலும் இடம் பெறவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சப்ளிமெண்டரி லிஸ்டில் கொடுக்கப்படும்.